40. *இலக்கிய நயம் பாராட்டுக.*

*(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)*

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றால திரிகூட மலையெங்கள் மலையே

**- திரிகூட ராசப்பக் கவிராயர்**

41. *தமிழாக்கம் தருக.*

Popular as the 'Cultural capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embillished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.

42. *பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.*

1. மாறன் பேச்சுதிறன் யார் வெல்ல முடியும்
2. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்
3. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்
4. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்

43. *கீழ்காணும் தலைப்பில் கவிதை எழுதுக.*

இயற்கை *(அல்லது)* கல்வி

## பகுதி - 4

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.* *(3x6=18)*

44. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதே நும்பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி நன்றியுரை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

46. அ) 'உரிமைதாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ...... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

*(அல்லது)*

ஆ) மகா நடிகரைக் கண்ட பாலச்சந்தரின் மனவோட்டத்தை நயத்துடன் விளக்குக.

## பகுதி - 5

47. *அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.* *(4+2=6)*

அ) "பாதகர் குழுமிச்" - எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "மகற்கு" - என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



**முதல் திருப்புதல் தேர்வு - 2024** | தேர்வு எண் | | | | | | |

*காலம் : 3.00 மணி* **XII - தமிழ்** *மதிப்பெண் : 90*

## பகுதி - 1

*குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.*
*ii) சரியான விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.* *(14x1=14)*

1. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர்மட்டம் உறிஞ்சுதல்

2. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது
அ) தனிக்குடும்பம் ஆ) விரிந்த குடும்பம்
இ) தாய் வழிச் சமூகமுறை ஈ) தந்தை வழிச் சமூகமுறை

3. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | - | 1) சேர்ந்தாரைக் கொல்லி |
| ஆ) பயன்தூக்கார் செய்த உதவி | - | 2) ஞாலத்தின் மாணப் பெரிது |
| இ) சினம் | - | 3) தெய்வத்துள் வைக்கப்படும் |
| ஈ) காலத்தினாற் செய்த நன்றி | - | 4) நன்மை கடலிற் பெரிது |

அ) 4, 3, 2, 1
ஆ) 3, 4, 1, 2
இ) 1, 2, 3, 4
ஈ) 2, 3, 4, 1

4. 'ஒரீஇ' என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை ஈ) வினையெச்சம்

5. **கூற்று 1:** தொல்காப்பியம் தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் ஆகும்
**கூற்று 2:** இளம்பூரணர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார்
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று 1 சரி 2 சரி ஈ) கூற்று 1 தவறு 2 தவறு

6. சங்க காலத்தில் அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம்
இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

7. கடையேழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

8. ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு ஒதுக்கிப் பணியாற்ற வேண்டும் என்பதை திருவள்ளுவர் எந்த அதிகாரத்தில் விளக்கியுள்ளார்
அ) வலி அறிதல் ஆ) காலம் அறிதல்
இ) இடம் அறிதல் ஈ) மடியின்மை

9. முச்சந்தி இலக்கியம் என்பது
**கூற்று 1:** கதை வடிவிலான வடிவம் உடையது
**கூற்று 2:** பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ) 1 சரி, 2 தவறு ஆ) 1, 2 சரி
இ) 1, 2 தவறு ஈ) 1 தவறு, 2 சரி



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner

10. 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் ஆங்கில நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட நூல் எது?

அ) இரட்சணிய மனோகரம் ஆ) போற்றித் திருஅகவல்

இ) ஏசு காவியம் ஈ) இரட்சணிய யாத்திரிகம்

11. ***தவறானதைக் கண்டறிக.***

அ) தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் ஆராய்ந்து மீட்டுருவாக்கம் செய்தவர் மயிலை சீனிவாச வேங்கடசாமி ஆவார்

ஆ) 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்னும் இவரது நூலில் மறைந்துபோன 133 நூல்களின் குறிப்புகள் உள்ளன

இ) 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் இவரது நூல் கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முதல் நூல் ஆகும்

ஈ) மத்த விலாசம் என்ற நாடக நூலை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கியுள்ளார்

12. விருத்தம் என்னும் ஒரே வகைச் செய்யுளில் அமைந்தவை

அ) சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம்

ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை

இ) மணிமேகலை, குண்டலகேசி

ஈ) சீவக சிந்தாமணி, கம்பராமாயணம்

13. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ) இலக்கியம் ஆ) கணிதம்

இ) புவியியல் ஈ) வேளாண்மை

14. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல அது நம்பிக்கை மையம் - காரணம்

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியின் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ அனைத்தும்

## பகுதி -2 (பிரிவு - 1)

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x2=6)***

15. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" - விளக்கம் தருக.

16. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யாா்க்கு?

17. 'மூச்சு நின்று விட்டால்
பேச்சும் அடங்கும்' - கவிதைக்கு பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்.

## பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x2=4)***

19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

20. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

## பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக.*** ***(7x2=14)***

22. ***உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.***

கிணற்றுத் தவளை போல



23. ***கீழ்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.***

அ) கொண்டு

ஆ) முன்

24. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்று.***

ஆட்டாண்ட வெளையாண்ட கொயந்தைய அப்பா எங்கு இழுத்துக் கொண்டு போனார்?

25. ***ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

அ) அறிந்து

ஆ) அமர்ந்தனன்

26. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.***

அ) முன்னுடை

ஆ) உரனுடை

27. ***கீழ்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.***

விண்மீன், ஒளிர், எரி, விழு

28. காப்பியத்தை குறிக்கும் பிற பெயர்கள் யாவை?

29. ***தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.***

கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டிக் கூரை அமைத்தார்

30. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்கு சான்று தருக.

## பகுதி - 3 (பிரிவு - 1)

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டும் எனக் கேட்கிறார்?

33. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்கவும்.

34. கடையேழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

## பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.*** ***(2x4=8)***

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் விளக்கம் எழுதுக.

37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38. மயிலை சீனி.வேங்கடசாமி நினைவு சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

## பிரிவு - 3

***குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.*** ***(3x4=12)***

39. அ) நிரல் நிறை அணியைச் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

***(அல்லது)***

ஆ) 'அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்'

***- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.***



www.Padasalai.Net

Scanned with OKEN Scanner